Registered as a News Paper in Ceylon P.M.G. No. H. A. 9/300 of 1953.

விரோதி ஞூ (1889) ஆவணி மீ 28 உ ஆரம்பமானது

இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசூ] யாழ்ப்பாணம்:- குரோதி ஞூ ஐப்பசி மீ கசூ உ வெள்ளிக்கிழமை (30 October. 1964) [இல-௩௦]

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கமேற்குநாடுகளைப் பின்பற்றுவது நலம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்புவிழா

24-10-64 சனிக்கிழமை குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. என், சபாரத்தினம் அவர்கள் தலைமையில் 'ஷிகல்லூரிப்பரிசளிப்புக்கூட்டம நடைபெற்றது பிரபல வழக்கறிஞரும் சைவ பரிபாலனசபைத் தலைவருமாகிய 'சிவநெறிக்காவலர்' திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தனர். பிரதமாசிரியருடைய அறிக்கை படிக்கப்பட்ட பின் அவருடைய பாரியார் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்:—

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சைவப்பிள்ளைகள் சைவச் சூழ்நிலையில் கல்வி கற்பதற்கு இரண்டு வித்தியாசாலைகளை நிறுவினர். ஒன்று தமிழ்வித்தியாசாலை. மற்றையது ஒரு ஆங்கிலப்பாடசாலை. தமிழ்வித்தியாசாலை இப்பொழுதுள்ள நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். பணவசதிக் குறைவினாலும் அரசினர்உதவி கைகூடாமையாலும் ஆங்கில பாடசாலை தொடர்ந்துநடைபெறவில்லை. யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் 1889ம் ஆண்டு ஒருசைவாங்கிலகலாசாலையை ஆரம்பித்தனர். அக்காலம் சைவ பரிபாலன சபைக்குத் தலைவராயிருந்தவர் திருவனந்தபுரம் பிரபல இளைப்பாறிய உயர்தர நீதிபதி திரு. த செல்லப்பாபிள்ளை அவர்களாவர். பாடசாலை மனேஜராகக் கடமையாற்றியவர் அப்புக்காத்து திரு. சி. நாகலிங்கம் அவர்கள். சபைக்காரியதரிசியாகவும் தனாதிகாரியாகவும் கடமையாற்றியவர்கள் முறையே திரு. V. காசிப்பிள்ளை அவர்களும், திரு. மு. பசுபதிச் செட்டியாரவர்களுமாவர். இப் பெரியாகளுடைய ஊக்கத்தினால் வித்தியாசாலை வளர்பிறைச் சந்திரனைப்போலவளர்தலாயிற்று.

இக்கல்லூரியில் அறிவும் ஆற்றலும் மிக்க அறிஞர்கள் பிரதமாசிரியராகக் கடமையாற்றினர். திரு. நெவின்ஸ் செல்வத்துரை, திரு ஷிவராவ், திரு. ஸன்ஜீவராவ், திரு. ரிறூப் போன்றவர்கள் கல்லூரியின் ஆக்கத்துக்காக உழைத்தனர், திரு நெவின்ஸ் செல்வத்துரை ஆங்கில இலக்கியங் கறபிப்பதில் ஆற்றல் படைத்தவர். பிழை புரியும் மாணவர்களை பிரம்பினால் தண்டனை புரிந்து திருத்த வேண்டுமென்ற கொள்கையுடையவர். 'Spare the rod and spoil the child' என்ற ஆங்கில முதுமொழியில் நம்பிக்கை உடையவர் திரு. ஸன்ஜீவராவ், நெவின்ஸ் செல்வத்துரை அவர்களுடைய கொள்கையைஆதரியாதவர். பிழை செய்யும் மாணவர்களை அன்பினால் திருத்துகின்ற ஆற்றல் படைத்தவர். கல்லூரியினது மரபை ஆதரிக்கக்கூடிய பெரியார்கள் அதற்குப் பிரதமாசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருகின்றனரென்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கல்வியின் நோக்கம் கடவுள் திருவடிகளைத் தொழுதலே. அந்தக் குறிக்கோளுடன்தான் நம் முன்னோர்கள் இக்கல்லூரியைத் தாபித்தனர். இக்கல்லூரியின் இலட்சியம் பசுபதிச்செட்டியாரால் கட்டப்பட்ட மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் சரசுவதி படத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. "கற்க கசடறக் கற்றவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்பதாகும்.

கற்றபடி ஒழுகுவதே கல்வியால் அடையும் பயன். மாணவர்களிடத்தில் நல்லொழுக்கம் உண்டாகவேண்டுமென்பதற்காக நம் முன்னோர்கள் இச்சிறந்த குறள் வெண்பாவைக் கல்லூரியின் குறிக்கோளாகத் தெரிந்துள்ளனர்.

ஐரோப்பாவுக்கு யான் சென்றிருந்த காலத்தில் இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் முக்கியமாக மேற்கு ஜெர்மனியிலும் உள்ள கல்வி நிலையங்களில் மாணவர்கள் கல்வி பயின்றபின் அவர்களை அவரவர்கள் ஆற்றலுக்குத்தக்க படியாக மேற்படிப்புகளுக்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நற்சிந்தனை

(இல்வாழ்க்கை)

கொல்லார்பொய் சொல்லார்
குறிப்பறியு மில்லறத்தார்
எல்லார்க்கு மேலென் றிசை.

திருவாசக விழா

வழமைபோல ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் திருவாசக விழா 11-12-64 தொடக்கம் 20-12-64வரை நடைபெறும் சாதனை, தியானம், புராண படனம், பிரசங்கம், கூட்டு வழிபாடு, திருவாசக வகுப்பு முதலியன ஷ்டி விழாவில் இடம்பெறும். 17-12-64 வியாழக்கிழமையன்று சிவபூசாதுரந்திரர்களை அழைத்து மடத்தில் சிவபூசை செய்விக்கவும் நிருவாகிகள் தீர்மானித்திருக்கின்றார்கள்.

—:—

அகில இலங்கைச் சைவமகாநாடு

கைதடி கிழக்கு இந்து வாலிப சங்கத்தாரால் 6, 7, 8-11-64-ம் நாட்களில் திருவருளை முன்னிட்டு, கைதடி கிழக்குச் சனசமூக நிலையத்தில் ஒருசைவமகாநாடு நடைபெறும். முதல் நாள் இரவு 7 மணிக்கு திருஞானசமபந்தர் அரங்கில் திரு. க. தம்பிப்பிள்ளை யே பி. அவர்கள் தலைமையில் கொடியேற்றுதல், பொதுக்கூட்டம், தீர்மானங்கள் நிறைவேற்றுதல், நிகழும்.

தீர்மானங்கள்:

1. திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், நல்லூர்க் கந்தசுவாமிகோவில், கீரிமலை ஆகிய சைவத் தலங்களைப் புனிதநகராக்குமாறு அரசாங்கத்தை வேண்டுவது.
2. கைதடி கிழக்கில் ஆச்கிரமமொன்று நிறுவுதல்.
3. விஜயதசமி, தைப்பூசம், ஆடி அமாவாசை, மகா சிவராத்திரி ஆகிய புனித தினங்களை விடுமுறை நாட்களாக்குமாறு அரசாங்கத்தை வேண்டுவது.

இரண்டாம் நாள் இரவு 6-30 மணிக்கு திருநாவுக்கரசர் அரங்கில் திரு.மு, சிவசிதம்பரம் பா. உ. அவர்கள் தலைமையிலும், மூன்றாம் நாள் இரவு 6-30 மணிக்கு சுந்தரமூர்த்திநாயனார் அரங்கில் திரு. வ. ந. நவரத்தினம் பா. உ. அவர்கள் தலைமையிலும் பல சைவப்பெரியார்கள் சைவ சமயஞ் சம்பந்தமான விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்.

சைவாதீனம் வேண்டும்

:0:

பாராட்டு விழாவில் பேச்சு

“சைவப்பெரியார் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களைப் பாராட்டுவது சைவ சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் பெருமையைத் தரும், சைவசமயந் தழைத்தால் தமிழ்மொழி தழைக்கும். தமிழ்மொழி தழைத்தால் சைவந் தழைக்கும். இரண்டும் ஒன்றை ஒன்று பிரியாத நிலைமையிலுள்ளன. தேவாரம்பெற்ற திருக்கேதீச்சரம் திருக்கோணமலையாகிய தலங்களுக்கும் அன்னிய மதங்களால் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. முற்காலத்தில் சைவத்தையும் தமிழையும் சேர சோழ பாண்டிய மன்னர்கள் பாதுகாத்து வந்தனர். இக்காலம் நமது நாட்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் எங்கள் அரசாங்கம் பெரும் இடர் விளைக்கின்றது.

எங்கள் உயிரனைய சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் பாதுகாக்க நமது நாட்டிலொரு சைவாதீனம் அமைக்கப்படவேண்டும். அதனைத் திருக்கேதீச்சரத்திலமைப்பதேபொருத்தமாகும். அத்தகைய ஒரு சைவாதீனத்தை நம்மவர்கள் அமைக்குங்காலத்தில் அதற்குத் தலைவராக திரு. குமாரசுவாமிப்புலவர் அவர்களை நியமனஞ் செய்தல் பொருத்தமாகும்”.

இவ்வாறு கரவெட்டி மணிவாசகர் வித்தியாசாலை மண்டபத்தில் வித்துவான் க. நடராசன் எம். ஏ. பீ ஓ.எல் அவர்கள் தலைமையில் புலவர் அவர்களுக்கு 25-7-64 ல் அன்று நடத்தப்பட்ட பாராட்டுக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் கூறினார்கள்.

“இக்காலம் வித்தியாசாலைகளில் விஞ்ஞானக் கலையும் இலக்கியக்கலைகளுமே மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. தெய்வீகக் கல்வி முறையாகக் கற்பிக்கப்படுவதில்லை. அதனால் மக்கள் சைவசாதனங்களாகிய விபூதி உருத்திராக்கம் முதலியவற்றைப் போற்றுகின்றார்களில்லை. சைவப்புலவர் திரு. த. குமார சுவாமிப்பிள்ளை அவர்கள் தமது சாதனையினாலும் போதனையினாலும்அவற்றின் பெருமைகளை நமது நாட்டில் விளக்கி வருகின்றவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருடைய பணியை இக்காலம் அவர் புரிந்துவருகின்றாரெனக் கூறுவது மிகையாகாது” எனத் தலைவர்கூறினார்.

வித்துவான் திரு. க. கார்த்திகேசு அவர்கள் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளைப் பொருத்தமுடைய பண்ணுடனும் இசையுடனும் மக்கள் ஓதுவதைக் காண்பதரிதாகிவிட்டது. அவர்கள் தாங்கள் விரும்பியஇசைக்கு அவற்றை ஓதி அவற்றின் பெருமையையும் பயனையும் குறைக்கின்றார்கள். திரு த. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தேவார திருவாசகங்களை மரபுதவறாமலோதுகின்ற ஆற்றல் படைத்தவர்.

பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் இக்காலம் நமது நாட்டில் பல வித்துவான்களும் புலவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் தங்களுடைய தராதரப்பத்திரங்களினுதவியால் ஊதியமடைகின்றார்கள், ஆனால் அவர்கள் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் நடைபெறுகின்ற புராணபடனங்களில் தொண்டாற்ற முடியாதவர்களாயிருக்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

சைவப்பிரசங்கம்

—0—

நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் நிகழும் 30-10-64 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ, இராச இராசேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் சக்தி வழிபாடு என்னும் பொருள் பற்றி திரு. த. சுப்பிரமணியம் அவர்களும், தமிழும் சைவமும் என்னும் பொருள்பற்றி திரு. எஸ்- கே. நாதன் அவர்களும் சைவப்பிரசங்கம் செய்வார்கள்.

எங்கள் அறிவித்தல்

—0—

எதிர்வரும் 3-11-64 செவ்வாய்க்கிழமையன்று தீபாவலிப் பண்டிகையை முன்னிட்டு, இந்துசாதன அலுவலகத்திலும், சைவப்பிரகாச அச்சகத்திலும் கருமமாற்றுவோர்க்கு விடுமுறை வழங்கப்படும்.

—அதிபர்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

குரோதி ௵ ஐப்பசி மீ
கச உ வெள்ளிக்கிழமை

30-10-64

கந்தசஷ்டி

(2)

ஐப்பசி மாதத்திலே அமாவாசையையடுத்தபிரதமை முதல் சட்டியீருக வரும் ஆறு தினங்களிலும் முருகப்பெருமானை வழிபட்டு நோற்கும் விரதம் கந்தசட்டியென்பதாகும். இவ்விரதத்தை அநுட்டிக்கின்றவர்கள்காலையில்ஸ்நானஞ் செய்து சுத்த வஸ்திரம் தரித்து சந்தியா வந்தனம முடித்து வேலாயுதகரராகிய முருகப் பெருமானைத் தம்ப விம்ப கும்பம் என்னும் மூன்றினும் இரவிலே விதிப்படி பூசித்தல் வேண்டும். வெல்லம் சேர்த்து நெய்யினுற் சமைத்த மோதகத்தை நிவேதித்து பிற உபகரணங்களையும்செய்து வணங்கித் துதித்து அவருடைய புராணத்தைப் படித்துச் சிறிது சலத்தை ஆசமித்து உபவசித்திருக்க வேண்டும். சப்தமி திதியிலன்று முருகக் கடவுளுக்கு விசேஷபூசையியற்றிவிதிப்படி பாராயணஞ் செய்தல் வேண்டும். இங்ஙனம் சிரத்தையுடன் இவ்விரதத்தை அநுட்டிக்கின்றவர்கள் இம்மையின்பங்களையும்மறுமையின்பங்களையும் அடைவார்கள்.

சிங்கன் இறந்த பின்பு சூரபன்மன் தனது சேனைகளுடன் சென்று முருகப் பெருமானுடன் போர் புரிந்தனன். வீரவாகுதேவர் முதலிய இலட்சம் வீரர்களையும் பூதசேனைகளையும் இந்திர மாஞாலத் தேரினல் அகப்படுத்தி அண்டகோளகையினுச்சியிற் சிறையிட்டான். பலவகையான மாயப் போர்களைச் செய்தான். முருகப்பெருமான் அவனுடைய சேனைகள் முழுவதையும் சிரிப்பினுல் எரித்தனர். சூரபன்மனது தாயாகிய மாயையின் உதவியினல் அவைகள் உயிர் பெற்றெழுந்தன. மீட்டும் அவைகளை முருகக்கடவுள் அழித்தனர், பின்பு சூரபன்மனுக்குத் தன் உண்மை வடிவத்தைக் காட்டினர். அப்பொழுது அவனுக்கு உண்மை புலப்பட்டது.

பின்பு மெய்யுணர்ச்சி மறைய சூரபன்மன் போர்புரிய வந்தான். முருகக்கடவுள் அவனை வேலாயுதத்தினுற் பிளந்து கொன்ருர். பிளவுபட்ட இரண்டு கூறுகளும் சேவலும் மயிலுமாக வர அவைகளை வாகனமும் கொடியுமாகக் கொண்டனர்.

இவ்விதமான போர் முருகப் பெருமானுக்கும் சூரபன்மனுக்கும் இடையில் நிகழ்ந்த காலந்தான் முன் குறிப்பிட்ட ஆறு தினங்களாகும். சட்டித்திதியிலன்று தான் சூரசங்காரம் நடைபெறும்.

முருகப்பெருமானுடைய அருள் நாட்டம் சேர்ந்தவுடன் சூரபன்மன் பகை நீங்கி ஞானத்தையடைந்தனன், ஞானிகளுடைய தரிசன வேதியினுற் காரிரும்பு செம்பொன்னுனுற் போலவுள்ளது இந் நிகழ்ச்சி.

தீயவை புரிந்தாரேனுங்
குமரவே டிருமுனுற்ருல்
தூயவ ராகிமேலைத்
தொல்கதி யடைவரென்கை
யாயவும் வேண்டுங்கொல்லோ
வடுசம ரிந்நாட்செய்த
மாயையின் மகனுமன்றே
வரம்பிலாவருள்பெற்றுய்ந்தான்.

எத்துணைத் தீவினைகளைச் செய்தோராயினும் சுப்பிரமணியப் பெருமானுடைய திவ்விய சந்நிதானத்தில் வந்தால் தூயோர்களாய் மேற்கதியை அடைவாரென்பதை ஆராய வேண்டுமோ? அவரோடு இந்நாள்வரையும் போர்புரிந்த மாயையின் புதல்வனுகிய சூரபன்மனுமன்ரே அவருடைய எல்லையில்லாத திருவருளைப் பெற்றுய்ந்தான்.

எவ்விதமான கொடியவர்களாகவிருந்தபொழுதிலும் முருகப்பெருமானைப் பக்தியோடு வழிபடுவாராயின் அவருடைய அநுக்கிரகத்தையடைந்து நற்கதி பெறுவர் என்பது இதனுல் பெறப்படுகின்றது.

கந்தசட்டி ஆறு தினங்களிலும் உபவாசமிருந்து விரதமனுட்டிக்கயியலாதவர்கள் முதலைந்து தினமும ஒருவேளை உணவருந்தி ஆருவது நாள் உபவாசமிருந்தும் விரதமனுட்டிக்கலாம்.

மனத்தைப் புலன்வழிச் செல்லாமல் இறைவன் திருவடியைச் சிந்திக்கச் செய்வதே விரதத்தின் நோக்கம். அதற்குத் துணையாக நமது உடலையும மனம் புத்தி சித்தம் அகங்காரம் முதலிய அந்தக்கரணங்களையும் நம்வசப்படுத்துவதற்காகவே உணவைச் சுருக்குதல், பூசைபுரிதல், புராணங்களைக் கேட்டல் முதலிய வழிகளை வேதாகமங்கள் வகுத்திருக்கின்றன. முருகப்பெருமானுடைய திருவருளையடைதற்கு, கந்தசட்டி ஒரு சிறந்த விரதமாகும். இவ்வருடம் கந்தசட்டி விரதம் 5-11-64 அன்று ஆரம்பமாகின்றது.

* * *

தீபாவலி

—0—

தீபாவலி என்பது இந்துக்களுடைய சமய சமபந்தமான கொண்டாட்ட தினமாகும். தீபாவலி என்னும் சொற்ருெடர் தீபாவளி எனவும் வழங்கப்படும். தீபம் — ஆவளி என்ற இரு பதங்கள் சேர்ந்த சொற்றொடரே தீபாவளி; தீபங்களின் நிரை என்பது அதன் பொருள். முன்னெரு காலத்தில் திருமால் நரகாசுரன் என்ற அசுரனைச் சங்காரஞ் செய்து தேவர்களுடைய துன்பங்களை நீக்கினுர். நரகாசுரன் தான் இறந்த தினத்தில் உலகத்தவர்கள் தீபங்களை நிரையாக ஏற்றி அவற்றுக்கு முன்பாக இருந்து எண்ணெய் தேய்த்துப் பின் ஸ்நானஞ் செய்து கோடி வஸ்திரம் தரித்து, பலகாரங்களருந்தி மங்களமாகக் கொண்டாடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். அவ்விதமாக நடைபெறுகவெனத் திருமால் பதிலளித்தனரெனக் கூறப்படுகின்றது. மக்கள் தூயசிந்தையுடையவர்களாயும், கடவுள் பக்தியுடையவர்களாயும் திகழும் வகையில் இத்தினத்தைப் புனிதமாகக் கொண்டாடுதல் நாட்டுக்கு நன்மையயக்கும். இவ்வருடம் தீபாவலி 3-11-64 அன்று நடைபெறும்.

——

திருமுறைகள் தெய்வீகமானவை

பண்டிதமணி அவர்களின் பேச்சு

"தேவாரங்கள் முதலிய திருப்பாடல்களைப் பண்ணுக்கேற்பப் படித்தல் வேண்டும். அப்பொழுது அதனுல் அரும பயன் கிடைக்கும். சிலர் திருமுறைகளை ஓதும்போது உண்மை உருவத்தையே உருக்குலைத்துவிடுகின்ருர்கள். கேட்கவே முடியாமல் இருக்கும். இசை வல்லார் செல்வத்துரை அவர்களிடம் பயின்ற மாணவர்கள் திருமுறைகளை அழகாகப் படிக்கிருர்கள். திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பூசையின்போது தேவாரங்களை இனிமையாகக் கேட்க முடிகிறது.

அரசாங்கத்தில் உயர் பதவி வகித்த்வர்களான திரு. மு. குமாரசிங்கம்அவர்கள் அப்பாசாமி ஓதுவாரிடம் நெடுங்காலம் திருமுறைகளை ஏற்ற பண்களோடு பயின்று உயர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் உலோகோபகாரமாக இந்த இலவச தேவாரப்பண் பயிற்சி வகுப்பை நடாத்த முன்வந்திருப்பது நாம் செய்த பாக்கியமே" என்றிவ்வாறு திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை வீதியில் அமைந்திருக்கும் பண்டிதமணி அவர்களது இல்லத்தில் சென்ற வியாழக்கிழமை மாலை விஜய தசமித்தினத்தன்று ஆரம்பமான இலவச தேவாரப்பண் பயிற்சி வகுப்பின் ஆரம்பத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறினுர்கள்.

விநாயகர், சரஸ்வதி வணக்கத்துடன் ஆரம்பமான இப் பயிற்சி வகுப்பில் இசையாசிரியர் திரு. மு. குமாரசிங்கம் அவர்கள் முதலாவதாகப் "பிடியதனுருவுமை கொள மிகுகரியது"என்னும் பாடலை ஆரம்பமாகக்கொண்டு பயிற்சியை நடாத்தினுர்கள்,

ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்றும் இவ்வகுப்பு வாரத்தில் இருமுறை நடைபெறுமென்றும திருவருள் நலத்தால் நன்மை கிடைக்கும் என்றும், ஈற்றில் இசையாசிரியர் திரு. மு. குமாரசிங்கம் அவர்கள் கூறினுர்கள். ——

உ

சிவமயம்

மெய்கண்டதேவநாயனர் குருபூசை

நாள்; ஐப்பசிமீ ககூ உ (4-11-64) புதன்கிழமை
இடம்: சைவபரிபாலன சபை, நாவலர் மண்டபம்,

நிகழ்ச்சிகள்:

இரவு 6½ மணி ஆரம்பம்
1- கடவுளாராதனை. 2. தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரகுருக்கள் அவர்கள்
விரிவுரை: 'மெய்கண்டதேவநாயனுர்'
வித்துவான், பண்டிதர், இ. திருநாவுக்கரசு அவர்கள்.

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக,

சைவ பரிபாலன சபை. மு. மயில்வாகனம்
யாழ்ப்பாணம், 29-10-64. சமயப்பிரசார அமைச்சர்.

நமசிவய முருகா !

(அளவையூர் — சஞ்சீவி)

இராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி.

பல்லவி

நீலமயில் முருகா நீபமலர் முருகா
நிதசுகந் தாமுருகா — முருகா (நீ)

அநுபல்லவி

பாலசி வமுருகா பார்வதி யாள்முருகா
கோலக்கு ருமுருகா கோழிக்கொடி முருகா (நீ)

சரணம்

மான் மருகா முருகா — வாரணன் மகிழ் முருகா
மணிவடி வேல் முருகா — வள்ளிகுஞ் சரிமுருகா
நான்மறைத் தமிழ் முருகா — ஞானபண் டிதமுருகா
நற்றுணைவா முருகா — நமசிவய முருகா. (நீ)

மௌனம் தந்தாரையும் மறக்கலாமோ?

[சைவப்பெரியார். திரு. பொ. கைலாசபதி அவர்களது ஞாபகார்த்த தினம், கார்த்திகை மாதம் 8-ந்தேதி. அதனைக் குறித்து இக்கட்டுரை தெல்லிப்பழை, அ. இ. சிவனடியார் திருக்கூட்டஉறுப்பினர் திரு. செ. கோவிந்தசாமி அவர்களால் எழுதப்பட்டது.]

இப் பெருந்தகையார் அளவெட்டியில் சைவவேளாளர் குலத்தில் பொன்னம்பலம் என்னும் சைவப் பெரியாருக்கும், பார்வதிஅம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக 1903ம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தார். ஐந்து வயது நிரம்பியதும் அணமையில் வசித்த மகாவித்துவான் சிவானந்த ஐயரிடம் கல்வி பயின்ருர். பின்பு ஆங்கிலக் கல்வி கற்க விரும்பி மல்லாகம் ஆங்கில வித்தியாசாலைக்கு அனுப்பப்பட்டார். அந்தக் காலத்தில் மயிலிட்டி திரு. சி சுவாமிநாதன் அப்பாடசாலைத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினுர், கொல்லங்கலட்டி திரு. தி. இரத்தின சபாபதி உபாத்தியாயரும் அவ் வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினுர் இந்தச் சந்தர்ப்பத்தில் திரு கைலாசபதி அவர்களுக்கு இரத்தின சபாபதி என்னும் இச்சைவப் பெரியாருடன் தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இவர் மிக விரைவாக வகுப்புக்கு மேல் வகுப்பு உயர்த்தப்பட்டு மிகச் சுருக்கமான காலத்தில் மற்றிகுலேஷன்பரீட்சையில் சித்தியடைந்தார்.

அதன் பின் தாம் கற்ற பாடசாலையாகிய மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையிற்றுனே ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இதற்குச் சிறிது காலத்தின் பிறகு இரத்தின சபாபதி உபாத்தியாயர் பாடசாலையில் இருந்தும்விலகினுர், திரு. பொ. கைலாசபதி அவர்கள் உயர்தரக் கல்வி கற்க விரும்பி, திருநெல்வேலிபரமேசுவரக் கல்லூரிக்குச்சென்ருர் அப்பொழுது அங்கு சு. சிவபாதசுந்தரம் பி. ஏ. அவர்கள் உப அதிபராகக் கடமையாற்றினுர். அவர் திரு. கைலாசபதி அவர்களிடத்தில் மிக்க

தொடர்ச்சி 3ம் பக்கம்

யாழ் மத்தியகல்லூரி அதிபர் நியமனம்

—0—

பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் புதிய அதிபராக திரு. E. சபாலிங்கம் (B.Sc உயர்தர ஆசிரியப்பயிற்சிப் பட்டமுடையவர்) அவர்கள் (26-10-64) திங்கட்கிழமை நியமிக்கப்பட்டனர். மேற்படி கல்லூரிக்கு ஒரு இந்து சமயத்தைச் சேர்ந்தவரை அதிபராக நியமித்தமை இதுவே முதன்முறையாகும்.

இளைப்பாறும் பழைய அதிபர் திரு. A. E. தம்பர் அவர்கள் மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்த கூட்டத்தில் புதியஅதிபர் அவர்களை அறிமுகஞ்செய்தனர். புதிய அதிபர் தமது பதிலுரையில் "ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர்அவர்கள் மேற்படி கல்லூரியினது பழைய மாணவரெனவும் குறிப்பிட்டனர்.

திரு. S. மகாலிங்கம் அவர்கள் உபஅதிபராக நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றனர். 27-10-64-ல் திரு. A. E: தம்பர்அவர்களுக்கு ஒரு பிரியாவிடைக்கூட்டம் நடைபெற்றது. ——

நூல் வெளியீட்டு விழா

வித்துவான் வ். சி. கந்தையா அவர்களால் எழுதப்பட்ட "மட்டக்களப்புத் தமிழகம்" என்னும் நூலின் வெளியீட்டுவிழா மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில 31-10-64 மாலை 4-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

திரு. செ. இராசதுரை பா. உ. அவர்கள்தலைமையில் பல அறிஞர்கள்பேசவிருக்கின்றனர். வில்லுப்பாட்டும் இடம்பெறுகிறது.

——

சித்தாந்த நூல்களே சிவனடி சேர்க்கும்

— ச. தண்டபாணிதேசிகர்

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம், தென்னிந்தியா]

27-10-64-ல் திருவெண்ணைநல்லூரில் நடைபெற்ற சித்தாந்த சைவ மகாநாட்டில் மகாநாட்டுத் தலைவர் மகாவித்துவான் ஸ்ரீ ச. தண்டபாணி தேசிகர் தமது முன்னுரையில் ஸ்ரீமெய்கண்டதேவரின் துணைகொண்டு இப்போது இந்தப் பேரவையில் எழுந்தருளியிருக்கின்றோம். இன்று விஜயதசமி வெற்றிவிழா, வெற்றி என்பது பூசலுக்குப் பின் ஏற்படுவதே எனக் கூறினார்.

மேலும் மகாவித்துவான் ஸ்ரீ ச. தண்டபாணி தேசிகர் நவராத்திரியைப்பற்றிக் குறிப்பிட்டுபேசுகையில் ஆண்டுக்கு 2 தடவை நவராத்திரி விழா உண்டு, ஒன்று சித்திரை பௌர்ணமி முதல் 10 நாள் கொண்டாடுவதற்கு வசந்த நவராத்திரி விழாவென்றும், புரட்டாசி அமாவாசையைத் தொடர்ந்து 10 நாள் கொண்டாடும் விழா சாரதா நவராத்திரிவிழாவாகும். ஆனால் வசந்த நவராத்திரி விழாவைக் கொண்டாடுவதாகத் தெரியவில்லை, பராசக்தியின் ஆற்றல் எளியோர்களுக்கும் பயன்படும்படியாக நாம் சாரதாநவராத்திரியை அனுட்டித்துக் கொண்டே வருகின்றோம். சாரதா நவராத்திரிவிழாவை நாம் இம்மைப்பயன் ஒன்றை மட்டும் கருதி துர்க்கை - லட்சுமி - சரஸ்வதி தேவிகளை வழிபட்டுக்கொண்டு வருகின்றோம். ஆனால் சாரதா நவராத்திரிவிழாவை ஞானமார்க்கத்திலும் பயன்படுவதற்கு ஆத்ம வெற்றியாகவும் கொண்டு வழிபாடுகள் செய்து கொண்டு வரல்வேண்டும். அதன் பொருட்டே நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விஜயதசமி வெற்றி விழாவாகிய இன்று ஸ்ரீமெய்கண்டதேவர் வீற்றிருக்கின்ற இந்த ஞான பூமியிலே சித்தாந்த சைவ மகாநாட்டை நடத்திக்கொண்டு வருகின்றார்கள் என்றும் கூறினார்.

மேலும் மகாவித்துவான் ஸ்ரீ. ச. தண்டபாணி தேசிகர் பேசுகையில் மனிதன் கடைத்தேற வேண்டுமானால் லௌகிகம் முதல் சைவ சித்தாந்த நூல்கள் ஒன்றினால்தான் கடைத்தேற முடியும். அதற்கு இலக்கணம் — இலக்கியமாகவுள்ள சித்தாந்த சாஸ்திர நூல்கள், மற்றும் புராணங்கள், அனுபவ நூல்களான பண்டார சாஸ்திரம்போன்ற நூல்களைப் பயிலல்வேண்டும், நமது ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமான் அருளிச் செய்துள்ள பெரியபுராண வசனம் என்ற நூலும் கருவூலமாகவும் நமக்குக்கொடுத்துள்ளார்கள். ஆகவே லௌகிக நூல்களைப் படிப்பதில் காலத்தைப் போக்காமல் அனுபவ நூல்களைப் படிப்பதுதான் சிறந்ததாகும் என்றும் கூறினார்.

வித்துவான் ஸ்ரீ எஸ். சாமி ஐயாதேசிகர் "உபாயநிட்டை வெண்பா" என்ற தலைப்பிலும், வித்துவான் ஸ்ரீ. டி. எஸ், தியாகராஜ தேசிகர் "நிட்டை விளக்கம்" என்ற தலைப்பிலும், ஆதீன வித்துவான் குடந்தை ஸ்ரீ த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை "அருளுபதேசம்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

மகாநாட்டின் நினைவுமலராக பண்டார சாத்திரம் உபாய நிட்டை வெண்பா — நிட்டை விளக்கம் உரையுடன் வெளியீடு செய்யப்பட்டது. —...

மௌனம் தந்தாரை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பிரேமை உடையவராகவும் இருந்தார்,

பின் சிறிது காலத்துள் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் அக்கல்லூரியை விட்டு, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபராகச் சென்றார். கைலாசபதி அவர்கள் இன்ரர் வகுப்பில் சித்தியடைந்து பீ எஸ். சி. வகுப்பிலும் சித்தியடைந்து எம். எல். சி. வகுப்புப் பரீட்சை எடுப்பதற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தார், ஒரு முறை அளவெட்டியில் இருந்து கொல்லங்கலட்டிக்குச் செல்லும் வழியாகக் கைலாசபதி அவர்கள் வரும்பொழுது திரு. தி. இரத்தின சபாபதி உபாத்தியாயரும் அவரைச் சந்தித்தார். அப்போது இரத்தினசபாபதி உபாத்தியாயர் எதிரே வந்து "தம்பீ! இனி நீர் எம்,எஸ் சி பரீட்சை எடுக்கவில்லையா?" என்று கேட்டார். அதனைக் கேட்ட கைலாசபதி அவர்கள் வீடுபோகும் வரையும் அவர் கூறியதை யோசித்தபடி சென்றார். இந்தப் பட்டங்களை ஒரு பொருளாகத் தான் எண்ணுவதாகக் கருதியே இந்த உபாத்தியார் இந்தக் கேள்வியைக்கேட்டார் என யோசித்தார். அதன்பின் பரீட்சைகள் எடுப்பதைவிட்டு,சிவபெருமானோடு இரண்டறக்கலத்தலில் நோக்குடையவராகவும் மௌன ஞானியாகவும் திகழும் மார்க்கத்தில் ஒழுகவாரம்பித்தனர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி அதன்பின் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலைக்கு உப அதிபராக நியமிக்கப்பட்டார். அங்கு பல வருடம் உப அதிபராகக் கடமையாற்றித் தமது 59-ம் வயதில் கார்த்திகை மாசப் புனர்பூச நட்சத்திரத்தில் சிவனோடு இரண்டறக் கலந்தனர் — —

திருக்கோயில் பூந்தோட்டம்

யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் ஸ்ரீ இராச ராசேஸ்வரி அம்பாள் கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும்பூந்தோட்டத்தில் 24-10-64 வெள்ளிக்கிழமை சுபவேளையில் பூங்கன்று நாட்டும் வைபவத்தை பிரம்மஸ்ரீ வி, எஸ். எஸ். மணிபாகவதர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள், இவ்வைபவத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

அணிந்துரை அரங்கம்

நவராத்திரி துதிப்பாடல்கள்

நாவலர் வித்தியாசாலை
வெளியீடு.

விலை சதம்: 40.

பிரபல புத்தகசாலைகளிலும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையிலும், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

நல்ல தாளில், மஞ்சள்நிற உறையுடன், சுத்தமான அச்சில் வெளிவந்துள்ளது, வித்தியாசாலை மாணவர்களும் பிறரும் முக்கியமாக நவராத்திரி காலத்திலும் பிறவேளைகளிலும் பாராயணஞ் செய்து, கடவுள் அநுக்கிரகத்தைப் பெறக்கூடியமுறையில், விநாயக வணக்கம், சிவன் துதி, உமாதேவியார் துதி, துர்க்கை துதி, இலக்குமி துதி, சரஸ்வதி துதி என்ற தலைப்புகளின் கீழ் பொருத்தமான செய்யுட்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் உள்ளத்தில் பக்தியை வளர்க்கச் சிறந்த கைநூலாக அமைந்துள்ளது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே

அச்செழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரைவுளது, அச்செழு நீர்வேலி —வழக்காளி
இல, M.B. 5598

எதிராக
நீர்வேலி, அச்செழு
1. செல்லையா குலசிங்கம்
2. சரவணமுத்து செல்லையா —எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5598-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் ஒரு துண்டுக் காணி 1964 – ம் ஆ டிசெம்பர் ௴ 5 ௳ சனிக்கிழமை (5-12-1964) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1805/25. இன்னும் ரூபா 1450-க்கு 29-4-1963 தொடக்கம் 17-12-63 வரை 6 வீத வட்டியும் கூடிய தொகைக்கு இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 233-10 சதமும்,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க்கோவிற்பற்று அச்செழு இறை "வேம்பனீர் கலட்டி" சில.பர (18) பதினெட்டு இதற்கெல்லை கிழக்கு அ. வயிரமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய காணி, வடக்கு K, இளையதம்பியின் காணி. மேற்கும் தெற்கும் ஒழுங்கை, இடடங்கலும். பதிவு K 148/55.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு
26-10-64.
M. 199 30-10-64.

பிழை திருத்தம்

16-10-64 இந்துசாதனத்தில் வெளிவந்த M.B. 3655-ம் இலக்க வழக்கில் ஆதன விபரத்திலுள்ள [illegible] "கோளியன்தம்பன்" எனத் திருத்தி வாசிக்கவும்.

சைவாதீனம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கின்றார்கள். திரு. த. குமாரசுவாமிப்புலவரவர்கள் புராணங்களுக்குச் சிறந்த முறையாகப் பயன்சொல்லும் தகுதி படைத்தவர். மக்களிடத்தில் தெய்வக் கொள்கையையும் பண்பாட்டையும் உண்டாக்குவதற்குச் சிறந்த சாதனமாகவுள்ளது புராணபடனம். தேவார திருவாசகங்களை உள்ள உணர்ச்சியுடன் ஒருவர் ஓதினால் ஓதுகின்றவருக்கும் கேட்பவர்களுக்கும் நன்மையுண்டாகும், புலவரவர்கள் அங்ஙனம் அவற்றை ஓதி மக்கள் உள்ளங்களில் கடவுள் பக்தியை வளர்த்து வருகின்றார்,

திரு. வே, கந்தப்பு அவர்கள் புலவர் அவர்களைப் பாராட்டி, கரவை மக்கள் அவருக்குச் சார்பாக ஒரு பொற்கிழி வழங்கினார்கள். வித்துவான் தி. க. கார்த்திகேசு அவர்கள் புலவர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

சைவப்புலவர் அவர்கள் பதில் கூறியபொழுது தமக்கும் கரவெட்டி மக்களுக்கும் 1917-ம் ஆண்டு தொடக்கம் தொடர்புண்டென்றும், வெல்லன் பிள்ளையார் கோயிலுக்குச் சைவப்பிரசங்கம்புரியவும் புராணபடனஞ் செய்யவும் தாம் அக்காலத் தொடக்கம் மூன்று தலைமுறையாக வருவதாகவும்கூறினார், கரவெட்டி மக்கள் சிறந்த சைவப்பற்றும், பண்பாடும் படைத்தவர்கள். அவர்கள் தமக்கு அளித்த பாராட்டையும் சிறப்புகளையும் தம்மையாளுகின்ற அம்மையப்பருடைய திருவடிகளுக்குச் சமர்ப்பிப்பதாகவும் கூறினார். கணபதிப்பிள்ளை உபாத்தியாயர் யாவருக்கும் நன்றிகூறினார்.

வேலையில்லாத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் வேலைத்தலங்களுக்கும் விவசாயம் முதலிய தொழிலுக்கும் அனுப்பப்படுவர். கல்விச்சாலைகளை விட்டுவிலகிய மாணவர்களுக்கு வேலையில்லையென்ற கவலையில்லை. அதனால் அந்த நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதில்லை, நமது நாட்டில் மாணவர்கள் வித்தியாசாலைகளைவிட்டு விலகிய பின்பு யாது செய்வதென்றறியாது கலங்குகின்றனர். மேற்கு நாடுகளைப்போல நம்து நாட்டிலுள்ள மக்களுக்கு வேலை வசதிகளை ஆக்கிக்கொடுப்பது அரசினரினதும், கல்வித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய கடமையாகும்.

பரிசில் பெற்ற மாணவர்களுக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறேன். பரிசில் பெறாதவர்கள் மனச்சோர்வடையவொண்ணாது. அடுத்த ஆண்டு பரிசில் பெறக்கூடியதாகக் கவனமாகக் கல்விகற்க வேண்டும். — —

பிஸ்கால் விற்பனை

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இலக்கம்: 6912

உடுத்துறை, 1. சரவண சபாபதிப்பிள்ளையும்
2, பெண் சின்னப்பிள்ளையும் —வழக்காளிகள்
உடுத்துறை, எதிராக

1. சின்னர் விநாயகமூர்த்தி
2. பெண்சாத பாறுபதிப்பிள்ளை, ஆரியவளை
3. செல்வமாணிக்கம் பெண்பிள்ளையனார் கந்தையா வதிராயன்
4. செல்லப்பா வயிரவப்பிள்ளையும்
5. பெண் சின்னப்பிள்ளை
6. வேலுப்பிள்ளை வீரகத்தி
7. கணபதிப்பிள்ளை அப்புக்குட்டி
8. சின்னையா சின்னப்புவும்
9. பெண் முத்தம்மாவும், உடுத்துறை
10. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம், வதிராயன்
11. கணபதிப்பிள்ளை பெண் சின்னம்மா, உடுத்துறை
12. வயிரவிப்பிள்ளை சிவசம்பு, பளை
13. பொன்னையா மகள் ஜெயராணி
14. பொன்னையா மகள் சரஸ்வதி
15. பொன்னையா மகள் பரமேஸ்வரி
} மைனர் பராபரிப்புக்காரனாக 16-வது எதிரி
16. சின்னப்பொடியர் செல்லையா, தம்பசாமம், பளை
17. பிள்ளையினார் கந்தையா, வதிராயன்
18. வயிரவிப்பிள்ளை பொன்னுச்சாமி
19. கறுவல் சின்னத்துரை —எதிராளிகள்.

மேற்சொல்லிய இலக்க வழக்கில் கோட்டால் எனக்கனுப்பிய கட்டளையின்படி இதன்கீழ் சொல்லப்படும் ஆதனத்தில் மேற்சொல்லிய முதலாம், இரண்டாம் வழக்காளிகளுக்கும், 2, 3, 5, 6, 7, 9, 10, 11, 12, 13, 14, 15, 18 எதிராளிகளுக்கும் உள்ள நயம் உரித்து பிரயோசனங்களையும் 196[illegible]-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆதனத்தடியில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சியில் பச்சிலைப்பள்ளி என்னும் பகுதியில் உடுத்துறைக்கோவிற்பற்று செம்பியன்பற்று கடற்கரை நிலம் உறுதிப்படி 25 பேட்ச் ஆனால் பிரிவிடுதலின்படி இதில் அடங்கியவையும் B/54/283-ம் இலக்கப் பதிவின்படி 27 6/10 பேட்ஸ். கிழக்கு 1-ம் வழக்காளியின் ஆதனம், வடக்கு கடற்கரை, மேற்கு வல்லியப்பர் நல்லதம்பியின் ஆதனம். தெற்கு அளவுகாரர் எஸ். சுப்பிரமணியம் அவர்களால் 18-4-1964ல் உண்டாக்கிய 1139-ம் இலக்கப்படத்தில் விஸ்தரிக்கப்பட்ட 1-ம், 2-ம் கண்டங்களைக்கொண்டதுமான 3-ம், 11-ம் எதிரிகளுக்குடைய ஆதனம். இதில் 11 8/10 பேட்ஸ் கொண்டதும் இதில் அடங்கியவை யாவும் சொல்லப்பட்ட 2-ப் துண்டாகும்: கிழக்கு 3 — 11-ம் எதிரிகளுக்குடைய ஆதனம், வடக்கு கடற்கரை, மேற்கு 1-ம் துண்டு, தெற்கு 3 — 11-ம் எதிரிகளின் ஆதனம்.

கவனிப்புகள்:-

(அ) ஆதனம் முதலில் பங்காளருக்குள் பெறுமதிக்குக் குறையாமல் விற்கப்படும். அவ்விதம் அவர்கள் வாங்கத்தவறினால் திரும்ப ஏலத்தில் மற்றவர்களுக்கும் ஆகக்கூடிய கேள்விகாரருக்கு விற்கப்படும். மற்றவர்களோடு பங்காளரும் கேட்கலாம்.

(ஆ) கொள்விலைப்பணம் முழுவதும் பிஸ்கால் சலாரும் உடனே கட்டவேண்டும். கொள்விலை ரூபா 100/- மேற்பட்டால் பங்காளிகளைத்தவிர மற்றவர்கள் உடனே கொள்விலையில் நாலில் ஒரு பங்கும் பிஸ்கால் சலார் முழுவதும் உடனே கட்டி மிகுதிப் பணத்தை 30 நாட்களுக்குள் இறுக்கப் போதியதும் நல்லதுமான 2 பிணைகாரருடன் உடனே ஒப்பம் எழுதல் வேண்டும்.

(இ) பிஸ்கால் சலாரின் விபரமாவது:-

பிரசித்த விளம்பரச்செலவு கொமிஷன் கொள்விலைப்பணத்தில் 100-க்கு 2 வீதமும் பயணச் செலவு முதலியன,

பிஸ்கால் கந்தோர்,
யாழ்ப்பாணம், 23-10-64.

க, ஆறுமுகம்,
வடமாகாண பிஸ்காலுக்காக

M 201 30-10-64.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல: M B 5187.

மண்டதீவு 1. சிவனடியார் ருமநாதன் பெண் சின்னம்மாவும் 2. ருமனுதன் செல்வரத்தினம் சார்பாக முதலாம் வழககாளியின் கிட்டிய உரிமையாளர்
—வழக்காளிகள்.

எதிராக

மண்டதீவு
1. ஏரம்பு கணபதிப்பிள்ளையும்
2. பெண் விசாலாஷியும்.
3. சிவனடியார் ருமனுதன்
—எதிரிகள்
4. சி.முருகேசுகதிர்காமத்தம்பியும்
5. பெண் மரூலம்.
-தெரிவிடப்பட்ட பங்காளர்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5187 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1964ம்௵ கார்த்திகை மீ 21 ம் உ சனிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு (21-11-64) அந்தக் காணிககுள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபா 350 ம் 31-10-62 தொடக்கம் 13-5-63 வரைக்கும் 15 % வீத வட்டியும் அதன்மேல்முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 148-50.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் அல்லைப்பிட்டிக்கோயிற்பற்று மண்டதீவு இறை தீவுப்பிரிவு 'கலட்டுவன்' பர நில.இலா 3. 0 குளி. செய்பயிர் வான்பயிர்களும் மற்றுமதைச் சேர்ந்தவையும், எல்லை கிழக்கு கார்த்திகேசு அம்பலவாணரி னுரிமையாளருககும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு கார்த்திகேசு அம்பலவாணரி னுரிமையாளரி ஆதனம். மேற்கு ரேட்டு தெற்கு வீரகத்தி சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்கும் உரியவாதனம்.

செ. விசாகரெத்தினம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
133 பருத்தித்துறைறோட்டு.
நல்லூர்,யாழ்ப்பாணம், 15-10 64,
ம. 195 30-10-64.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 4293
மானிப்பாய் செல்லப்பா வைரமுத்து -வழக்காளி.
எதிராக
மானிப்பாய் செம்பர் கந்தையா.
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4293-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1964 ௵ மார்கழி மீ 12 உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 969-40 சதம். 28-9-61 தொடக்கம் 30-3-62 வரைக்கும் ரூபாய் 600-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 170-02 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோயிற்பற்று மானிப்பாய் இறை ''விலப் ஓடை வளவு'' பர. நில. இலா. 4½-ம், வீடும், பயிர்வகைகளும், விலப்ஓடைக்காணியில் தெற்குப் பக்கத்து எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை மூகப்பும், கந்தன் பெண் தெய்வானைக்கும் உரிய ஆதனம். வடக்கு நன்னியன் கணபதிக்குரிய ஆதனம், மேற்கு குழந்தையன் வயிரவனின் ஆதனம், தெற்கு நாகர் அருளம்பலத்தின் ஆதனம், இதில் சொரியலாய் 2½ பரப்பும் அதைச் சேர்ந்தவைகளும்

அ ஜெகநாதன்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
16 A அம்மன்றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
M 192 30-10-64,

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிககோட்டில்
இல, M.B. 3623
திருநெல்வேலி யாழ்ப்பாணம்
1. சின்னத்தம்பி வயித்திலிங்கமும்
2. பெண் தெய்வநாயகி
—வழக்காளிகள்
எதிராக
புத்தூர் மேற்கு, புத்தூர்
1. தம்பு சிங்கராசாவும்
2, பெண் இராசமணி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B. 3623-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ம் திகதி (17-12 64) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1208/- சதம் 50. இன்னும் ரூபா 700-க்கு 16-9-60 தொடக்கம் 27-4-64 வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும். பின்பு கூட்டுத தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 324/- சதம் 90,

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை ''சிவாசியன் தோட்டம்'' பர.நில இலா. 5½ எல்லை கிழகது சின்னத்தம்பி தம்பிப்பிள்ளைக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். வடக்கு சிதம்பரப்பிள்ளை கைம்பெண் தங்கம்மாவினுதனம், மேற்கு நன்னித்தம்பி சினனத தம்பியினுதனம். தெற்கு குட்டி இராசாவினுதனம். வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும்: இதடங்கலும்.

2. ஷை இறை "வீரயர்கலட்டி" பர.நில.இலா. 90. எல்லை கிழககு றேட்டு, வடக்கு மளுவராயர் கந்தையாவின் உருமைககாறரினுதனம், மேற்கு கந்தர் வல்லிபுரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வல்லிபுரம் பெண் பூதாத்தையினுதனம். இதில் சொரியலாய் பர. நில. இலா, பத்து.

தா, செல்லையா,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
இல: 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M 197 30-10-64.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
1. உரும்பிராய் காசிநாதர் அப்பையா
2, ஷை ஊர் பெண் நேசம்மா
வழக்காளிகள்,
இல M B 4158
எதிராக
கோப்பாய் வடக்கு சின்னத்தம்பி இளையதம்பி
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4158 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக காணிகள் என்னுல் 1964 ம் ௵ கார்த்திகை மீ 21 ம் திகதி சனிக்கிழமை முற்பகல பத்து மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1550ம் 1000க்கு 18-7-1961 தொடக்கம் 11-7-1963 வரை 10 வீதமான வட்டியும் அதன் மேல் முழுததொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 224/40 சதம்,

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று கோப்பாய் வடக்கிறை, 'சணிலவத்தை' பர நீ இல இரண்டு (பர நீ இல 2) வீடுகளும் வேம்புகளும் தெற்கெல்லை யொழுங்கையின் மேற்குப் பாகத்திலிருக்கும் கிணற்றுப் பாகமும் வழி வாய்க்காலுரித்தும் எல்லை கிழக்கு இளையதம்பி பெண் நாகமுத்துவிற்குரியவாதனம், வடக்கு பொன்னுச்சாமி யேசுதாசனுக்குரிய வாதனம். மேற்கு அப்பாபிள்ளை பெண் சின்னக்குட்டிக்குரியவாதனம். தெற்கு ஒழுங்கை. இதிற் சொரியலாய் ¾ பாகம்

2. ஷை கோப்பாய் வடக்கிறை 'சணிலவத்தை' பர. நீ இல நாலு (பர நீ இல 4) வடக்கெல்லையிலிருக்கும் வேம்பிற் பாகமும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பாகமும் தற்பொழுது எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ஒழுங்கையும் பொன்னுச்சாமி யேசுதாசனுக்குரிய வாதனமும், மேற்கு இளையதம்பி பெண் நாகமுத்துவிற்குரியவாதனம். தெற்கு செல்லப்பா பெண் தெய்வானைக்குரிய வாதனம். இதடங்கலிற் சொரியலாய் ¾ பாகம்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1964ம்௵ புரட்டாதி 28-உ
[illegible],
M 202 30-10-64

கோட்டு விற்பனவு விளம்பரம்

தம்பையா சின்னத்துரை
கைம்பெண் வள்ளியம்மை
நீர்வேலி —வழக்காளி
இல. M.B. 5076
எதிராக
சிவக்கொழுந்து வேலாயுதபிள்ளை
நீர்வேலி தெற்கு, நீர்வேலி
—எதராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5076-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 5 துண்டுக்காணிகளை 1965ம்௵ தைமீ 2உ (2-1-65) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 6610-ம், 18 - 9 - 1962 தொடக்கம் 7-2-1962 வரைக்கும் ரூபாய் 5000-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 279-55 சதம்,

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "வடுவபுலம்" என்னும் காணி நிலப் பரப்பு 3, எல்லை கிழக்கு கீழ் குறிப்பிட்ட மாதிரி, எல்லை வடக்கு சண்முகம் தம்புவும் பங்காளரும், மேற்கு கந்தையா கைம்பெண் பாறுபதமும் பக்கத்தில் கை ஒழுங்கையும், தெற்கு சிற்றம்பலம் மனைவி சின்னப்பிள்ளையும், ஒரு கை ஒழுங்கையும், இதில் உள்ள எல்லாக்காணிக்கும் கிழக்கு எல்லைக் காணிக்குள் தெற்கு எல்லையில் கிணற்றுப் பங்கும் வலதுபக்கத்தில் வளி வாய்க்காலும் உண்டு. பதிவு இலக்கம் K 66/130.

2. மேற்கூறியபடி கோவிற்பற்றும் "வடுவபுலம் தோட்டம்" என்னும் 9 9/16 குளி நில பரப்பு எல்லை கிழக்கு கதிரவேலு கந்தையாவும், இராமப்பிள்ளை ஆறுமுகமும் வடக்கு இராமப்பிள்ளை ஆறுமுகமும், சண்முகம் தம்புவினதும், எல்லை மேற்கு சண்முகம் தம்புவும், S.வேலாயுதபிள்ளையும் தெற்கு சிற்றம்பலம் மனைவி சின்னப்பிள்ளையினதும்,சின்னத்தம்பி மனைவி செல்லமுத்துவினதும், இதில் உள்ள எல்லா காணிக்கும் வடக்கு எல்லையில் உள்ள கிணற்றிலும் தெற்கு எல்லையில் உள்ள கிணற்றிலும் தண்ணி பங்கும் தெற்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும் வலது பக்கத்தால் வளி வாய்க்கால் உண்டு, பதிவு இலக்கம் K 127/79.

3 மேற்கூறியபடி கோவிற்பற்றும் "கடதாலை" என்னும் காணி 7 பரப்பு நெற் பரப்பு எல்லை கிழக்கு அருணசலம் கணபதிப்பிள்ளையின் ஆதனமும் வடக்குகணபதிப்பிள்ளையும் S.வேலாயுதபிள்ளையும் பங்காளரின் ஆதனமும் மேற்கு கட்டும், தம்பையா மனைவி பார்பதிபிள்ளையினதும் தெற்கு சோமநாதன் காத்தியேசுவினதும் ஆதனம், பதிவு இலக்கம் K 158/97.

4. மேற்கூறியபடி கோவிற்பற்று "நாமநன்சீமா" என்னும் காணி 10¼ பரப்பு நில பரப்பு வீட்டுடன் செய்பயிர்களும் வான்பயிர்களும், பங்குகிணறும்உண்டு எல்லை கிழக்கு இராமப்பிள்ளை ஆறுமுகம் வடக்கு ஒழுங்கையும் மேற்கு நல்லதம்பி வேலாயுதபிள்ளையினதும் சிற்றம்பலப் மனைவி சின்னப்பிள்ளையினதும். எல்லை தெற்கு நல்லதம்பி விஸ்வநாதரும் பங்காளரின் ஆதனமும். இவ்வளவும் பதிவு இலக்கம் K 158/98.

5, மேற்கூறிய கோவிற்பற்றும் "கைடநசி" என்னும் காணி 10 பரப்பு நில பரப்பு எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை மனைவி பார்பதியினதும் கந்தப்பு மனைவி தெய்வானையினதும் ஆதனம். வடக்கு முத்துத்தம்பி மனைவி அன்னப்பிள்ளையினதும் இளையதம்பி சின்னத்தம்பியின் ஆதனமும். மேற்கு வேலுப்பிள்ளை சீனிவாசகமும் மற்றவர்களும், தெற்கு பூதத்தபி சின்னத் துரையின் ஆதனமும். முழுவதும் பதிவு இலக்கம் K 158/99.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
M. 198 30-10-64.

யாழ்ப்பாணம்

—ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாணுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

இவ்வாரம் 1-11-64 — 8-11-64

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பெரிய பொறுப்புகளை ஏற்க நேரிடும். உடல் நலம் குன்றும், குடும்பத்தில் கலகம், வியாழன் பிற்பகல், வெள்ளி, சனி கவனம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

அதிக செலவு, உறவினர் பகை, தேவையற்ற எதிர்ப்புகள், பகைவர்க்குத் தோல்வி.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

குடும்பத்தொழில்களில் குழப்பம், தனிப்பட்ட தொல்லைகள் தீரும். புதுத் தொழில்களில் வெற்றி, பண வரவு.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

கலகங்களுக்கு மூந்துதல், உடல் நிலை குன்றும், குடும்பத்தில் கலகம். தொழில் முறையில் மாற்றம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

உட்பகைவர்களால் தொந்தரவு, குடும்பக் கலகங்கள், பொருள் வரவு, கண் நோய்,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வெற்றிக்கு அதிக உழைப்பு வேண்டும். புதுச் செயல்களில் தடை, சுகக்குறைவு, பகைவர்க்குத் தோல்வி.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வயிற்றுக்கோளாறு, நிம்மதிக் குறைவு, பொருள் வரவு, நிலங்களால் நன்மை.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

பொருள் வரவு, நிம்மதிக் குறைவு, சுதந்திரம் பாதிக்கப்படும், உடல் நிலை குன்றும்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சுகக்குறைவு, தந்தைவழி உறவினரால் தொந்தரவு, தொழில் துறையில் வெற்றி.

மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பகைவர்க்குத் தோல்வி, புதுக் கருமங்கள் தடையுடன் நிறைவேறும், குடும்பத்தில் தவறான கருததுகள்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

நண்பர்களிடம் நம்பிக்கை இழப்பீர், தந்தை சுகம் குன்றும், மூதவிரு நாட்களில் கவனம்

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

பொருள் வரவு, தடைகளை வெல்வீர். உடல் நிலை குன்றும், செவ்வாய். புதன், வியாழன் மூற்பகல் கவனம்.

நல்லூர் சாதனு பாடசாலையில் நவராத்திரி விழா

நல்லூர் சாதனு பாடசாலையில் நவராத்திரி கடைசி நாளன்று சரஸ்வதி பூசை விசேட பூசைகளுடன் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் பண்டிதர் இ. இராமச்சந்திரன், திரு. நடராசா, ஆசிரியர் கு. நமசிவாயம் ஆகியோர் நவராத்திரி மகிமையைப்பற்றிப் பேசினுர்கள்.

—:—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 30-10-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.